அவர்கள் அரசு இதை மறுபரிசீலனை செய்து ரூபாய் ஐயாயிரம் வழங்க ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பரிவோடு கேட்ட கேள்விகளுக்கு, புயல் மழை வெள்ளம் போன்ற இயற்கை இன்னல்களால் இறந்துபோகும் கால்நடைகளுக்கு மட்டும்தான் கால்நடை உதவி மருத்துவர், உதவி இயக்குநர் மற்றும் மண்டல இணை இயக்குநர் பரிந்துரையின்பேரில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அரசு நிர்ணயித்தபடி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. வேறு எந்தச் சூழ்நிலையிலும் இறந்து போகும் கால்நடைக்கு நஷ்டயீடு எதுவும் இதுவரை இத்துறையினால் வழங்கப்படவில்லை என்பதையும் தங்களின் மூலம் இப்போவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 318, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

318—

பட்டுச் சேலைகள்

***19116—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியிலுள்ள பெரும்பான்மையான ஊர்களில் பட்டுச் சேலைகள் அதிகமாக உற்பத்தியாகி விற்பனை குறைந்து சேலைகள் தேங்கிக் கிடப்பதைக் களைய பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரணி தொகுதியிலுள்ள பெரும்பான்மையான ஊர்களில் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை குறைந்து பட்டுச் சேலைகள் தேங்கிக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2002 மே 8]

கிடப்பதைப் பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்ய வழிவகை இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்பதைப் போல அம்மாவின் அரசிலே ஒரு மாதத்திற்கு முன்னால் போட்ட இந்தக் கேள்விக்கு இன்றைக்கு விடை கிடைத்திருந்தாலும் நேற்றைய முன்தினம் அம்மா அவர்களே தேங்கிக் கிடக்கின்ற சேலைகளை எல்லாம் அரசே கண்காட்சிகள் மூலமாகவும் அல்லது ஏலம் மூலமாகவும் விற்க பரிசீலிக்கப்படும் என்று உறுதி அளித்ததாலும் இன்றைக்குத் தேங்கிக் கிடக்கின்ற சேலைகளும் ஓரளவிற்குக் குறைந்து இருக்கின்ற காரணத்தினால் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஒரே ஒரு துணைக் கேள்வி. நான் கேட்பது எல்லாம் ஆரணி தொகுதியில் தனியார் பட்டு நெசவாளர்கள் நிறைய இருக்கிறார்கள். அம்மாவின் ஆட்சி இருந்தபோதுதான் 1992 ஆம் ஆண்டு அன்றைக்குக் கூலி உயர்வு பெற்றுத் தரப்பட்டது. அதற்குப் பின்னால் 10 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரையிலும் தனியார்களிடம் நெய்கிற கூலி நெசவாளர்களுக்கு அந்தக் கூலி உயர்வைப் பெற்றுத் தர முடியவில்லை. ஆகவே அம்மாவினுடைய ஆட்சி மீண்டும் வந்திருப்பதால் தனியாரிடம் நெய்கிற நெசவாளர்களுக்கு மறுபடியும் கூலி உயர்த்தித் தரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக ஒரு குழு அமைக்கப்படுமா? அல்லது தனியாக ஓர் உத்தரவு போடப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1948 ஆம் வருடத்திய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் கைத்தறி நெசவுத் தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதிய ஆணையை நடைமுறைப்படுத்த தற்போது தொழிலாளர் நலத் துறையிலுள்ள அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கைத்தறித் தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதியம் தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்படும் ஆணைகள் அடிப்படையில் கூட்டுறவு அமைப்புகளின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அடிப்படைக் கூலி உயர்வும் ஒவ்வோர் ஆண்டும் அடிப்படைக் கூலியில் 10% அகவிலைப்படி உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு அமைப்பிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு ஒவ்வொரு வருடமும் 10% அகவிலைப்படி வழங்கப்படுவதைப்போல தனியார் நெசவாளர்களுக்கு அகவிலைப்படி,

வழங்கப்படாததால் நெசவுக் கூலியில் இரண்டு பிரிவினருக்கும் இடையில் அதிக வித்தியாசம் உள்ளது. தனியார் நெசவாளர்கள், கூட்டுறவு நெசவாளர்களுக்கு இணையாக கூலி உயர்வு வழங்கக் கோரி அவ்வப்போது போராட்டம் செய்து வருகின்றனர். தனியார் நெசவாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மூலம் செயல்படுத்தினால் மேற்கூறிய பிரச்சினையை நிவர்த்தி செய்ய இயலும். கூட்டுறவு நெசவாளர்களுக்கும் தனியார் நெசவாளர்களுக்கும் ஒரே அளவிலான நெசவுக் கூலியினை நடைமுறைப்படுத்த--ஏதுவாக குறைந்தபட்ச ஊதிய சட்டத்தினை--கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு அதிகாரம் வழங்க, தக்க ஆணைகள் வெளியிடக் கோரி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 319, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

319—

மீன் விற்பனை

***13170—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரில் தரமான மீன்களை நியாயமான விலையில் விற்பதற்குச் சில்லறை மீன் விற்பனை அங்காடிகள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாநகரில் சில்லறை மீன் விற்பனை அங்காடி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் உணவை, தற்போது ஆட்டுக்கறி, கோழிக்கறியைவிட மக்கள் அதிகமாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS